# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUPALAYAM

## DEPOSITION OF WITNESS

## O.S.92/2020

## CNR.No.TNCB19000

Date:22.01.2025 PW2

| பெயர் | கனகராஜ் | வயது | 65 |
|---|---|---|---|
| த/பெ | ரங்கசாமி | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | மேட்டுப்பாளையம் | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | |

The witness swearned under oaths Act 1969 on this the day of 22th January 2025

வா.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு 4 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

**4-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். 4 ம் வாதி குமார் சொல்லி சாட்சி சொல்ல வந்திருக்கிறேன் என்றால் சரிதான். முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்தை நீதிமன்றத்தில் வெளியே வைத்து செய்தேன். அதை எங்கு வைத்து யார் தயார் செய்தார்கள் யார் சொல்லி தயார் செய்யப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் யார் பெயரில் இருந்தது என்றால் 4-1/2 ஏக்கர் ரங்கசாமி பெயரில் இருந்தது.

எந்த வருசப்படி பாத்தியப்பட்டது என்பது குறித்து எனக்கு தெரியாது. ரங்கசாமி எப்போது யாரிடமிருந்து விலைக்கு வாங்கின விபரம் எனக்கு தெரியாது. 4-1/2 ஏக்கர் பூமி எந்த காலை எண்ணில் இருந்தது என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். ரங்கசாமியிடமிருந்து ஒரு மாதையன் என்பவர் விலைக்கு வாங்கி அனுபவித்து வந்த விபரம் எனக்கு தெரியாது. மாதையன் என்பவரிடமிருந்து ஒரு செந்தில்குமார் என்பவர் விலைக்கு வாங்கி அனுபவித்து வருகிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தை யார் விலைக்கு வாங்கினார்கள் யார் அனுபவத்தில் இருந்து வருகிறது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் யார் வாங்கினார்கள் என்று தெரியாது. தற்போது ராஜப்பன், லவகுசா மற்றும் பேபி, சாந்தாமணி ஆகியோர்கள் அனுபவித்து வருகிறார்கள்.

விவசாய நிலங்கள், வருவாய் ஆவணங்களை பற்றி எனக்கு தெரியும். விவசாய நிலங்களில் யார் பெயரில் அடங்கல் உள்ளதோ அவர்கள்தான் அந்த நிலத்தின்சுவாதீனத்தில் இருந்து வருவார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தில் தற்போது யாருடைய பெயரில் சிட்டா அடங்கல் உள்ளது என்பது குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்தில் ஒரு பகுதியை ஒரு செந்தில்குமார் என்பவர் மாதையன் என்பவரிடமிருந்து கிரையம் பெற்று வருவாய் ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்து சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

தாவா சொத்துக்களை ரங்கசாமி என்பவர் மாதையனுக்கு விற்று விட்டு மாதையன் என்பவர் செந்தில்குமாருக்கு விற்று அவர்தான் தற்போது தாவா சொத்தின் ஒரு பகுதியில் இருந்து வருகிறார் என்றும் 4 ம் பிரதிவாதியின் பெயருக்கு தனிப்பட்டா ஏற்பட்டு அவருடைய அனுபவத்தில் இருந்து வருகிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்துக்கள் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றும் 4 ம் வாதி குமார் சொல்லி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

Sd/-K.Palanivel,

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.